ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.10 – பெரும்புறக்கடலை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.10 – பெரும்புறக்கடலை

‡ பெரும் புறக் கடலை அடல் ஏற்றினைப் ⋆
பெண்ணை ஆணை ⋆ எண்ணில் முனிவர்க்கருள்
தரும் தவத்தை முத்தின் திரள் கோவையைப் ⋆
பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை ⋆
அரும்பினை அலரை அடியேன் மனத்தாசையை ⋆
அமுதம் பொதி இன் சுவை ⋆
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ‖ **7.10.1** ‖

மெய்ந் நலத் தவத்தைத் திவத்தைத் தரும் ⋆
மெய்யைப் பொய்யினைக் கையில் ஓர் சங்குடை ⋆
மைந் நிறக் கடலைக் கடல் வண்ணனை ⋆
மாலை ஆல் இலைப் பள்ளி கொள் மாயனை ⋆
நென்னலைப் பகலை இற்றை நாளினை ⋆
நாளையாய் வரும் திங்களை ஆண்டினை ⋆
கன்னலைக் கரும்பின் இடைத் தேறலைக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ‖ **7.10.2** ‖

எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை ⋆
வாசவார் குழலாள் மலை மங்கை தன் பங்கனைப் ⋆
பங்கில் வைத்துகந்தான் தன்னைப் ⋆
பான்மையைப் பனி மா மதியம் தவழ் ⋆
மங்குலைச் சுடரை வட மாமலை உச்சியை ⋆

நச்சி நாம் வணங்கப்படும் கங்குலை ⋆
பகலைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ‖ **7.10.3** ‖

பேய் முலைத் தலை நஞ்சுண்ட பிள்ளையைத் ⋆
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை ⋆
மாயனை மதிள் கோவல் இடைகழி மைந்தனை ⋆
அன்றி அந்தணர் சிந்தையுள் ஈசனை ⋆
இலங்கும் சுடர்ச் சோதியை ⋆
எந்தையை எனக்கெய்ப்பினில் வைப்பினை ⋆
காசினை மணியைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ‖ **7.10.4** ‖

ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை ⋆
இம்மையை மறுமைக்கு மருந்தினை ⋆
ஆற்றலை அண்டத்தப்புறத்துய்த்திடும் ஐயனைக் ⋆
கையில் ஆழி ஒன்றேந்திய கூற்றினை ⋆
குரு மா மணிக் குன்றினை ⋆
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை ⋆
காற்றினைப் புனலைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ‖ **7.10.5** ‖

துப்பனைத் துரங்கம் படச் சீறிய தோன்றலைச் ⋆
சுடர் வான் கலன் பெய்ததோர் செப்பினை ⋆
திருமங்கை மணாளனைத் ⋆
தேவனைத் திகழும் பவளத்தொளி ஒப்பனை ⋆
உலகேழினை ஊழியை ⋆
ஆழி ஏந்திய கையனை அந்தணர் கற்பினை ⋆

கழுநீர் மலரும் வயல் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.6** ॥

திருத்தனைத் திசை நான்முகன் தந்தையைத் ⋆
தேவ தேவனை மூவரில் முன்னிய விருத்தனை ⋆
விளங்கும் சுடர்ச் சோதியை ⋆
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய அருத்தனை ⋆
அரியைப் பரி கீறிய அப்பனை ⋆
அப்பில் ஆர் அழலாய் நின்ற கருத்தனை ⋆
களி வண்டறையும் பொழில் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.7** ॥

வெஞ்சினக் களிற்றை விளங்காய் வீழக் ⋆
கன்று வீசிய ஈசனை ⋆
பேய் மகள் துஞ்ச நஞ்சு சுவைத்துண்ட தோன்றலைத் ⋆
தோன்றல் வாள் அரக்கன் கெடத் தோன்றிய நஞ்சினை ⋆
அமுதத்தினை நாதனை ⋆
நச்சுவார் உச்சிமேல் நிற்கும் நம்பியை ⋆
கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.8** ॥

பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையைப் ⋆
பாலுள் நெய்யினை மால் உருவாய் நின்ற விண்ணினை ⋆
விளங்கும் சுடர்ச் சோதியை ⋆
வேள்வியை விளக்கின் ஒளி தன்னை ⋆
மண்ணினை மலையை அலை நீரினை ⋆
மாலை மா மதியை மறையோர் தங்கள் கண்ணினை ⋆

கண்கள் ஆரளவும் நின்று ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.9** ॥

‡ கண்ண மங்கையுள் கண்டு கொண்டேன் என்று ⋆
காதலால் கலிகன்றி உரை செய்த ⋆
வண்ண ஒண் தமிழ் ஒன்பதோடொன்றிவை ⋆
வல்லர் ஆய் உரைப்பார் மதியம் தவழ் ⋆
விண்ணில் விண்ணவர் ஆய் மகிழ்வெய்துவர் ⋆
மெய்ம்மை சொல்லில் வெண் சங்கம் ஒன்றேந்திய கண்ண ! ⋆
நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் ⋆
கவியின் பொருள் தானே ॥ **7.10.10** ॥

அடிவரவு — பெரும்புறம் மெய் எங்களுக்கு பேய் ஏற்றினை துப்பனை திருத்தனை வெஞ்சினம் பண்ணினை கண்ணமங்கையுள் சிலை

பெரும்புறக்கடலை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்